

ஆத்தூர் தொகுதியில் 36 வருடங்களாக ஆதரவு அளித்து வரும் சின்னாளபட்டி கைத்தறி நெசவாளர்களை என்றும் மறக்கமாட்டேன் என்று மா.பொ.சி. நெசவாளர் காலனியில் நடைபெற்ற நியாயவிலைக் கடை திறப்பு விழாவில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசியதோடு, கைத்தறி நெசவாளர்கள் வசிக்கும் பகுதிக்கு தார்ச்சாலை வசதி, பேவர்பிளாக் சாலை வசதி, தெருவிளக்கு வசதி உடனடியாக செய்து கொடுக்கப்படும் என உறுதி அளித்தார்.

### வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில்

# நீர்வள மேம்பாட்டிற்கு ஒன்றிய அரசின் நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, டிச. 18–

தமிழ் நாட்டில் குறிப்பாக வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் நீர்வள மேம்பாட்டிற்காக ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து நாடாளுமன்ற மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.



அவரது கேள்விகள் வருமாறு:–

ஒன்றிய அரசின் பிரதான் மந்திரி கிருஷி சின்சாய் யோஜனா (PMKSY) எனும் திட்டத்தின் கீழ், நீர்வள சேமிப்பை மேம்படுத்த, வெள்ளப்பெருக்கு தடுப்பதற்கும், தமிழ்நாட்டில் நீர்ப்பிடிப்புத் திறனை உயர்த்துவதற்கும், நீர்நிலைகள் மற்றும் குளங்களை புதுப்பிக்க நிதி ஒதுக்கி உள்ளதா? இருந்தால், கடந்த ஐந்து ஆண்டுகளின் போது இதற்காக ஒதுக்கப்பட்ட நிதியுடன் அதற்கான விவரங்கள் தருக?

பொதுமக்களுக்கு நீர் பாதுகாப்பை உறுதிப்படுத்த, நீர் தரம் பரிசோதனை ஆய்வக சேவைகள் மற்றும் புல நிலை நீர் பரிசோதனை கருவிகள் வலையமைப்பை இயக்க தமிழ்நாட்டிற்கு, குறிப்பாக வேலூர் நாடாளுமன்ற தொகுதிக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா? இருந்தால், அதற்கான விவரங்கள் தருக?

தமிழ்நாட்டில் நீர்வளங்களின் நிலைத்தன்மையை மேம்படுத்த எந்த ஹைட்ரோஜியோகாலஜிக்கல் திட்டங்களை ஒன்றிய அரசு மேற்கொண்டதா? இருந்தால், அதற்கான விவரங்கள் யாவை?

தமிழ்நாட்டில் பாதுகாப்பான நீர்வள பயன்பாட்டிற்காக தொகுதி வாரியாக நிலத் தர நிறுவன வரைபடம் தயாரித்தல், நிலத்தடி நீர் ஆராய்ச்சி மற்றும் சீரமைப்பு ஆய்வு உள்ளிட்ட ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு ஒன்றிய அரசு நிதி ஒதுக்கி உள்ளதா? இருந்தால், அதன் விவரங்கள் யாவை?

இவ்வாறு அவர் கேள்வி கேட்டிருந்தார்.

அதற்கு ஒன்றிய அரசின் நீர்வளத் துறை அமைச்சர் ராஜ் பூஷன் சௌத்திரி எழுத்து பூர்வமாக அளித்த பதில் வருமாறு:–

ஒன்றிய அரசின் பிரதம மந்திரி விவசாய நீர்ப்பாசனத் திட்டத்தின் ஒவ்வொரு வயலுக்கும் தண்ணீர் திட்டத்தின் (PMKSYHKKP) கீழ், இந்திய அரசு, தண்ணீர் சேகரிப்பு திறனை மேம்படுத்தும் மற்றும் பாசன திறனைக் கூட்டும் நோக்கத்துடன், தமிழகம் உட்பட மாநிலங்களுக்கு நீர்நிலைகளின் பழுது, புதுப்பிப்பு மற்றும் மீட்பு (RRR) க்கான மத்திய உதவியை வழங்கியுள்ளது.

தமிழ்நாட்டில் 645 நீர்நிலைகளை உள்ளடக்கிய ஒன்பது கிளஸ்டர் மத்திய நிதியீடு கிடைக்க ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது.

31 மார்ச் 2025 வரை தமிழகத்திற்கு ரூ. 156.19 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. மேலும், தற்போதைய நிதிநிலைக்கேற்ப PMKSYHKKP கீழ் நீர்நிலைகளின் புதுப்பிப்புக் காக ரூ. 41.91 கோடி தருவதற்கான அங்கீகாரம் வெளியிடப்பட்டுள்ளது.

(ஜல் ஜீவன் மிஷன் (JJM) செயல்பாட்டு வழிகாட்டுதல்களின் படி, மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்க ளுக்கு ஆண்டுதோறும் வழங்கப்படும் நிதியின் 2% வரை நீர் தர கண்காணிப்பு மற்றும் கண்காணிப்பு (WQM & S) நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தலாம். இதில் மக்கள் பாதுகாப்பான குடிநீர் கிடைக்க உறுதி செய்வதற்காக நீர் தர பரிசோதனை ஆய்வக சேவைகள் இயக்கம் மற்றும் புல நில பரிசோதனை கருவிகள் வழங்கல் உள்ளிட்டவை அடங்கும்.

தமிழ்நாடு அரசு 2024–25 ஆண்டிற்கு ஜேஜெஎம் கீழ் தமிழ்நாட்டுக்கு ரூ.39.85 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது, இதிலிருந்து வேலூர் மாவட்டத்தில் நீர் தர பரிசோதனை ஆய்வக சேவைகளுக்காக ரூ. 56.60 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், புல நில பரிசோதனை கருவிகள் (FTKs) வாங்குதல் மற்றும் ஒவ்வொரு கிராம பஞ்சாயத்திலும் கிராம நீர் சுகாதார குழு (VWSC) உறுப்பினர்களுக்கு FTK பயிற்சி வழங்குவதற்காக ரூ.4.55 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் நீர் ஆதாரங்களின் நிலைத்தன்மையை மேம்படுத்துவதற்காக மத்திய நிறுவனங்களின் மூலம் ஒன்றிய அரசு பல ஹைட்ரோஜியோலஜிக்கல் ஆய்வுகள் மற்றும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

தமிழகத்தில் நீர் ஆதாரங்களின் நிலைத்தன்மைக்காக இந்திய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் சில முக்கிய நடவடிக்கைகள் பின்வருமாறு: குடிநீர் மற்றும் தூய்மை/ துப்புறவு துறை (DDWS), "நிலவி நீர் வாய்ப்புகள் வரைபடப்படுத்தல் (ஹைட்ரோஜியோமார்பாலஜிக்கல் வரைபடங்கள்) என்ற திட்டத்தை ரூ.198.92 லட்சத்தின் செலவில் தமிழ்நீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் (TWAD வாரியம்)க்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

தண்ணீர் மற்றும் கழிவு நீர் கழிப்பு துறை (DDWS), தமிழகம் பகுதியில் கேள்வி செய்யப்பட்ட 'நீர் அடர்த்தி சித்திரங்கள் வரைபடம் (HGM Maps)' திட்டத்திற்கு அங்கீகாரம் வழங்கியது, இதில் தொகுதி வாரியாக வரைபடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. HGM வரைபடத்தின் உதவியுடன், சோதனை அணைகள், ஊடுருவல் குளங்களும் மற்றும் ரீசார்ஜ் ஷாஃப்ட்களும் போன்ற பல்வேறு நீர் நிரப்பும் அமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன, இதனால் நீர்வள மேலாண்மை நீடித்திருக்க முடியும். மத்திய நிலத்தடி நீர் வாரியம் (CGWB) தேசிய நீர்வள வரைபடம் (NAQUIM) திட்டத்தையும் மொத்தமாக சுமார் 25 லட்சம் சதுர கிமீ பரப்பளவில், இதில் தமிழகம் பகுதியாக 1,05,742 சதுர கிமீ பரப்பளவும் உள்ள பகுதிகளுக்காக முடித்துள்ளது.

முதன்மைத் திட்டத்தின் படி, தமிழ்நாட்டில் சுமார் 88,000 செயற்கை நீர் சேகரிப்பு அமைப்புகள் மற்றும் மழைநீர் சேகரிப்புகள் 959 மில்லியன் கன மீட்டர் மேலுள்ள நீரைச் சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளன. மேலும், CGWB, மத்தியத் துறையின் திட்டமான நிலத்தடி நீர் மேலாண்மை மற்றும் கட்டுப்பாடு (GWMR) திட்டத்தை செயல்படுத்துகிறது. இந்த திட்டத்தின் கீழ், இந்தியா முழுவதிலும், தமிழ்நாட்டைச் சேர்ந்த மாநிலத்தையும் உட்பட, நிலத்தடி நீர் வளங்களின் ஆய்வு, கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் மேலாண்மைக்கு தொடர்புடைய நடவடிக்கை கள், நீர்வள வரைபடங்கள் தயார் செய்வது, நிலக்கீழ் நீர் ஆய்வு மற்றும் சீரமைப்பு ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த அனைத்து நடவடிக்கைகளுக்கும் செலவுகள் GWMR திட்டத்தின் மொத்த ஒதுக்கீடுகளிலிருந்து ஒதுக்கப்படுகின்றன.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறினார்.

### அணை எந்தக் குந்தகமும் இன்றி பாதுகாப்பாக உள்ளது!

# சோழவரம் ஏரியின் பாதுகாப்பு குறித்து வெளிவந்த செய்திகள்!

## அரசு விளக்க அறிக்கை!

சென்னை, டிச.18–

சோழவரம் ஏரியின் பாதுகாப்பு குறித்து வெளிவந்த செய்திகள் தொடர்பாக அரசு அளித்துள்ள விளக்க அறிக்கை வருமாறு :–

சென்னைக்கு குடிநீர் வழங்கும் முக்கிய நீர் ஆதாரங்களில் ஒன்று சோழவரம் ஏரியாகும். இந்த ஏரி திருவள்ளூர் மாவட்டம். பொன்னேரி வட்டத்தில் அமைந்துள்ளது. இந்த ஏரி 1891 ல் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்டு, 1970 ஆம் ஆண்டு காலத்திலிருந்து மூன்று முறை கரையின் மட்டத்தை உயர்த்தி 18.33 மீட்டர் உயரத்திலிருந்து தற்போது 19.96 மீட்டர் வரை அதாவது கரையின் உயரம் 5 அடிக்கு மேல் உயர்த்தப்பட்டு கொள்ளளவு 108 மில்லியன் கன அடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

சோழவரம் ஏரியின் மண் அணை அமைந்துள்ள இட த்தின் புவியியல் அமைப்பினாலும் அக்காலத்தில் மண்ணணை அமைக்கப் பயன்படுத்தப்பட்ட மண்ணின் தன்மையினாலும் 1980 முதல் தொடர்ந்து மண் அணையில் சரிவும் விரிசல்களும் ஏற்பட்டு அவ்வப்போது சீர் செய்யும் பணிகளும் பலப்படுத்தும் பணி களும் நடைபெற்று வந்தd.

இவ்வணையில் ஏற்பட்ட பாதிப்புகளைச் சீர் செய்ய மத்திய நீர் ஆணையம் (CWC) மற்றும் அணைகள் பாதுகாப்பு இயக்கம் அவர்களின் அறிவுரைகளின்படியும் பல்வேறு கட்டச் சோதனை மற்றும் வடிவமைப்புக்குப் பிறகு ரூ.120 கோடி மதிப்பீட்டில் சோழவரம் எரிக்கரையைப் புனரமைக்க முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த முன்மொழிவின் முதற்கட்டமாக சோதனை அடிப்படையில் தொலைக்கல் 2800 மீட்டர் முதல் தொலைக்கல் 3150 மீட்டர் வரை உள்ள கரையைச் சீரமைக்க அரசாணை (டி) எண்.16/ நீர்வள(பா.சி2) துறை, நாள்:10.022024இல் ரூ.40 கோடிக்கு நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டd.

கடந்த 14.10.2025 அன்று துவங்கிய வடகிழக்குப் பருவ மழையின் போது கரையின் மீது அமைக்கப்பட்ட தார்ச் சாலையில் தொலைகல் 2500மீ முதல் தொலைகல் 2670 மீ வரை சிறு விரிசல் ஏற்பட்டுள்ளது. இவ்விரிசல்களுக்கு அணையின் அடித்தளத்தில் அமைந்துள்ள மண் அமைப்பும் மிகுந்த நிலத்தடி நீரோட்டமும் காரணம் எனத் தெரிய வருகிறது.

இதனிடையே தலைமைப் பொறியாளர், நீ.வ.து. அணை பாதுகாப்பு இயக்கம், தரமணி, தலைமைப் பொறியாளர், நீ.வ.து., சென்னை மண்டலம், சேப்பாக்கம், சென்னை5, தலைமைப் பொறியாளர் (DR& CS) Expert, மற்றும் உறுப்பினர் உள்ளிட்ட சிறப்பு தொழில்நுட்பக் குழு தள ஆய்வு செய்து அணையின் பாதுகாப்பினை உறுதி செய்யத் தேவையான உடனடிப் பாதுகாப்பு மேற்கொள்ளவும் தக்க அறிவுரை வழங்கியுள்ளனர். மேலும் அரசு செயலர் நீர்வளத்துறை அவர்களும் தள ஆய்வு மேற்கொண்டு ஆய்வு மற்றும் சீரமைப்புப் பணிகளைத் துரிதப்படுத்தி அணையின் உறுதித் தன்மையைக் காக்க அறிவுரை வழங்கியுள்ளார்.

இவ்வாறான நிகழ்வி னால் ஏற்படும் நீள்வட்ட விரிசலையும், கீழ்ப்புற கரைச் சரிவில் ஏற்பட்டுள்ள மண் அரிப்புப் பள்ளங்களை (Gullies Due to rain fall) உடனுக்குடன் ஒப்பந்ததாரரின் உத்திரவாத காலத்திலும் அவர் சொந்த செலவிலும் தற்போது சீர்மைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் அணையின் கரையானது நேரடி மழைப் பொழிவில் பாதிக்காமல் இருக்க, பாதிப்படைந்த பகுதிகளில் சிமெண்ட் பெண்டோடைட் கலவை கொண்டு சரி செய்து தார்ப்பாலின் கொண்டு மூடப்பட்டுள்ளது. மேற்கூறிய உயர்மட்ட தொழில்நுட்பக் குழு அவர்களின் ஆலோசனைப்படி அணை சீரமைக்கப்பட்டு வருகிறது. தற்போது உள்ள நிலையில்படி அணையின் ஒட்டுமொத்தப் பாதுகாப்புக்கு எந்தக் குந்தகமும் இன்றி பாதுகாப்பாக உள்ளது என இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு சென்னை மண்டல நீர்வளத்துறை முதன்மைப் பொறியாளர் தெரிவித்துள்ளார்.



தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் வட்டம், திலி.தனி 214 ராமச்சந்திராபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் ரூ.48லட்சம் மதிப்பீட்டில் புதிய அலுவலகம் கட்டுதல் பணியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி. மார்க்கண்டேயன் துவக்கி வைத்தார். நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் செல்வராஜ், ராதாகிருஷ்ணன், சின்னமாரி முத்து, ராமசுப்பு, அன்புராஜன், இம்மானுவேல், துறை சார்ந்த அதிகாரிகள்,கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மதுரை மாவட்டம் கிழக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிழக்கு (வடக்கு) ஒன்றியத்துக்குட்பட்ட மாங்குளம், மீனாட்சிபுரம், சின்னமாங்குளம், பொருசுப்பட்டி, குருத்தூர் உள்ளிட்ட ஊராட்சி பகுதிகளில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி பொதுமக்களை நேரடியாக சந்தித்து அவர்களது தேவைகளை கேட்டறிந்து முடிவற்ற திட்ட பணிகளை துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மேலூர் வருவாய் கோட்டாட்சியர் சங்கீதா, மதுரை மண்டல கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் சதீஷ், மாவட்ட ஊராட்சி செயலாளர் விசாலாட்சி, தலைமை கழக வழக்கறிஞர் கலாநிதி, ஒன்றிய செயலாளர் மதிவாணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வடிவேல் முருகன், முன்னாள் ஒன்றிய சேர்மன் வீரராகவன், ஆணையூர் பகுதி செயலாளர் மருது பாண்டியன், விவசாய தொழிலாளர் அணி ஒத்தக்கடை சரவணன், கழக நிர்வாகிகள் திருமோகூர் சரவணன், அன்பு உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர், அனைத்து துறை அதிகாரிகள் மற்றும் திரளான பொதுமக்கள் பங்கேற்றனர்.

### விருதுநகர் வடக்கு மாவட்டம் தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பாக

# மாநில அளவிலான ஆண்கள் - பெண்களுக்கான மாபெரும் கூடைப்பந்து போட்டி!

## அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு பங்கேற்பு!

விருதுநகர், டிச. 18 -

விருதுநகர் வடக்கு மாவட்டம் தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பாக கழக தலைவர் முதலமைச்சர் தளபதியார் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு மாநில அளவிலான ஆண்கள் மற்றும் பெண்களுக்கான மாபெரும் கூடைப்பந்து போட்டி 20.12.2025 சனிக்கிழமை மற்றும் 21.12.2025 ஞாயிற்றுக் கிழமை ஆகிய தேதிகளில் காலை 10 மணி முதல் இரவு 7 மணி வரை விருதுநகர் ராமமூர்த்தி ரோட்டில் உள்ள வின் ரோஸ் ஸ்போர்ட்ஸ் கிளப்-ல் நடைபெறவுள்ளது.

இந்த விளையாட்டுப் போட்டிகளை துவக்கி வைத்து வீரர்களுக்கு பரிசுகள் வழங்குபவர்கள் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர், தெற்கு மாவட்ட தி.மு.க. கழக செயலாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி மற்றும் சுற்றுச் சூழல் காலநிலை மாற்ற துறை அமைச்சர் வடக்கு மாவட்ட கழக செயலாளர் தங்கம் தென்னரசு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதிமாறன், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் கௌதமன் சுரேஷ், ஜே.மனோகரன், நிவேதா, ஜெசிகா முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ்.எம்.குமார் பரிசுகள் வழங்குகின்றார்கள்.

இந்த நிகழ்ச்சிக்கு முன்னிலை எஸ்.ஆர்.பார்த்திபன், ஏ.வி.ஆர்.கோபால் ராம், டி.கே. பாபு வாசிம் முபாரக், ஆனந்த், முன்னாள் ஒன்றிய சேர்மன் பொண்ணு தம்பி, மாநில வர்த்தக அணி வனராஜா சிவகாசி, மாநகர செயலாளர் எஸ்.ஏ. உதயசூரியன், சிவகாசி மேயர் சங்கீதா இன்பம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சுபா ராஜா, கே.கே.எஸ்.எஸ். ஆர்.ரமேஷ், சிவகாசி துணை மேயர் விக்னேஷ், பிரியா காளி ராஜன், விருதுநகர் துணை சேர்மன் தனலட்சுமி துளசிராமன், சிவகாசி வடக்கு ஒன்றிய செயலாளர் தங்க ராஜா, விருதுநகர் வடக்கு ஒன்றிய செயலாளர் ஆவடையம்மாள், சிவகாசி தெற்கு ஒன்றிய செயலாளர் வேகன் ராஜ், வடக்கு ஒன்றிய செயலாளர் சந்தான பாண்டியன், நரிக்குடி வடக்கு ஒன்றிய செயலாளர் கண்ணன், பொன்னுத்தம்பி, சிவகாசி கிழக்கு ஒன்றிய செயலாளர் கோபி கண்ணன், ஒன்றிய செயலாளர் கே.கண்ணன், நரிக்குடி கிழக்கு ஒன்றிய செயலாளர் எம். செல்வம், நரிக்குடி தெற்கு ஒன்றிய செயலாளர் ஏ.பி. ரமேஷ், காரியாபட்டி நகர செயலாளர் ஆர்.கே. செந்தில், எம். முருகேசன், வர்த்தக அணி அமைப்பாளர் போஸ் என்ற ஜெயச்சந்திரன், பொதுக் குழு உறுப்பினர்கள் ஆர்.பி. மதியழகன், ஆர். சுதாகர், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் இரா. கிருஷ்ணகுமார், நகர துணைச் செயலாளர் ஏ.எஸ்.கே. ரமேஷ் குமார், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் தங்கத்தமிழ் வாணன், முன்னால் பொதுக்குழு உறுப்பினர் நவநீதகிருஷ்ணன்,

மாவட்ட வழக்கறிஞர் அணி எம்.எஸ்.அசோக், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சந்திரன், எம்.மணிவாசகம், அதிவீரம் பட்டி செல்வம் பொதுக் குழு உறுப்பினர்கள் சிவ சக்தி, பால்ராஜ், கமலி பாரதி சந்திரன், முகமது ஜான் பாஷா, மாவட்ட நிர்வாகிகள் தங்கராஜ், மாவட்டத் துணைச் செயலாளர் ராமமூர்த்தி, தினேஷ் ஆனந்த், ஏ.ஆர்.சி.பேரா, மாவட்டப் பொருளாளர் வேலுச்சாமி, சிவகாசி மாநகராட்சி பகுதி செயலாளர் ஏ.செல்வம், ஓவிய கருணாநிதி, பாண்டியன், ஜி.மாரீஸ்வரன், எம்.ஏ. அப்துல் முத்தலிப், எம்.காளி ராஜன், ஏ.ஞானசேகரன், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழக, பகுதி கழக நிர்வாகிகள், வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணியின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணியின் துணை அமைப்பாளர்கள் வெயில் ராஜ், சரவண குமார், கார்த்திக், சுந்தர மூர்த்தி, ராஜ்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொள்கின்றனர்.

இந்த நிகழ்ச்சிக்கு வரவேற்புரை விருதுநகர் நகர மன்ற தலைவர் எஸ்.ஆர். எஸ்.ஆர். மாதவன்.

நன்றி உரை விருதுநகர் நகரச் செயலாளர் எஸ்.ஆர். எஸ். தனபாலன் ஆற்றுகின்றனர்.

இந்த நிகழ்ச்சியை விருதுநகர் வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.ஜி. ராஜகுரு ஏற்பாடு செய்து வருகின்றார்.

இந்த விளையாட்டில் கூடைப்பந்து விளையாட்டு வீரர்கள் அனைவரும் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.


## நம் முகமும் முகவரியும்

தலைமைக்கழக அனுமதிபெற்றது

தலைமைக்கழக நிர்வாகிகள், அமைச்சர் பெருமக்கள், மாவட்டக்கழக செயலாளர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், வெளி மாநில அமைப்பாளர்கள், அனைத்து அணிச்செயலாளர்கள், இளைஞர் அணிச்செயலாளர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய / நகர / பகுதி / பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் சொற்பொழிவாளர்களின் அலைபேசி எண்களுடன் கூடிய முகவரிநூல் வெளிவந்துள்ளது.

கழக நிர்வாகிகளிடம் இருக்க வேண்டிய கழக அலுவலகங்களில் இருந்திட வேண்டிய மிக மிக முக்கியமான முகவரி நூல் ...



பக்கம் 536

விலை 500/-

நூலினை வங்கி மூலம் பெற :
அ. கூத்தரசன்
A/c. No. : 1262101017751
IFSC : CNRB0001262
கனரா வங்கி, கூடலூர் பிராஞ்ச்
கோவை - 20
செல் : 94863 24163

தொடர்பு கொள்ள
திருப்பூர் கூத்தரசன்
அன்னை அஞ்சுகம் பதிப்பகம்
153/1, சாமையன் நகர்,
எஸ்.ஆர்.கே.வி. அஞ்சல்
பெரியநாயக்கன்பாளையம்
கோவை - 641 020
செல் : 94863 24163




பரமக்குடி சட்டமன்றத் தொகுதி போகலூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட சத்திரக்குடி வாசன் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமை பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் முருகேசன், துவக்கி வைத்தார். உடன் மாவட்ட இணை இயக்குனர் டாக்டர் சிவானந்தவள்ளி, போகலூர் வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் கார்த்திக், வட்டார சுகாதார மேற்பார்வையாளர் பூமிநாதன் மற்றும் சுகாதார ஆய்வாளர் ராஜகோபால், குணசேகரன், கதிரவன், பூமிநாதன், வாசன் பள்ளியின் தாளாளர் எம்.எஸ். வாசன், கார்த்திக் பாண்டி, சந்தவழியான். கார்த்திகைசாமி, திருமுருகன், ஒன்றிய இளைஞர் அணி ராமச்சந்திரன், சண்முகசுந்தரம் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.